**<u>சுகாதார அமைச்சு,</u>**
**<u>மருத்துவ விடயங்களுக்கான நிறைவுகாண் மற்றும் துணை மருத்துவ சேவையின் பயிற்சிகளுக்கு இணையத்தினூடாக(Online) விண்ணப்பத்தினைப் பூர்த்தி செய்வதற்கான அறிவுறுத்தல்கள்</u>**

விண்ணப்பத்தினை பூரணப்படுத்துவதற்கு முன் வர்த்தமானி பத்திரிகை மற்றும் விண்ணப்பத்தினை பூர்த்தி செய்வதற்கான அறிவுறுத்தல்களை கவனமாக வாசிக்கவும்.

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித்திகதி **2020.11.30** ஆகும்

**<u>விண்ணப்பத்தினை செயற்படத்துவதற்கு முன்னர் விண்ணப்பதாரிக்கு தேவைப்படும் ஆவணங்களும் தகவல்களும்</u>**

ஒவ்வொரு விண்ணப்பதாரியும் வைத்துக் கொள்ள வேண்டியது

தேசிய அடையாள அட்டை

உயரம் (செ.மீட்டரில்)

தொடர்புகொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கம்

பணம் செலுத்திய பின்னர் வங்கியினால் வழங்கப்பட்ட பற்றுச்சீட்டு

1. கையடக்க தொலைபேசி இலக்கமொன்றை உள்ளிட வேண்டும் விண்ணப்பதாரி அவருடைய தந்தை அல்லது தாய் அல்லது பாதுகாவலரின் தொலைபேசி இலக்கங்களை வழங்க முடியும்.

2. விண்ணப்பதாரிகள் வங்கியில் பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதியினை தம்வசம் வைத்திருக்க வேண்டும். இலங்கை வங்கியின் எந்தவொரு கிளையிலும் ரூபா 500/= பணத்தை சுகாதார சேவை பணிப்பாளர் நாயகம் பரீட்சைக்கட்டணம் அறவிடல் இலங்கை வங்கி, தப்ரோபேன், கிளை இல **7041318** எனும் கணக்கிற்கு செலுத்துதல் வேண்டும். பணம்செலுத்திய பற்றுச்சீட்டின் எண் பொருத்தமான இடத்தில் இடப்படவேண்டும்.

**விண்ணப்பத்தினை சமர்ப்பிப்பதற்கான நடைமுறைகள்.**

இணையத்தளத்தினூடாக விண்ணப்பத்தினைப்பதிவேற்றிய பின்னர் நீங்கள் பெற்றுக்கொள்ளும் 5 இலக்கங்களை கொண்ட எண்ணை பாதுகாப்பாக வைத்துக்கொள்ளுங்கள் (பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தின் வன் பிரதியினை பெற்றுக்கொள்வதற்காக)

குறிப்பு:

- விண்ணப்பிக்கும் போது இணையத்தள தடங்கல்கள் மற்றும் வேறேதும் கராணமாக தடங்கல்கள் ஏற்பட்டு பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் மீள ஆரம்பத்திலிருந்து புது விண்ணப்பங்களாக பூரணப்படுத்தப்பட வேண்டும்.
- ஒன்றுக்கு மேற்பட்ட பாடநெறிகளுக்கு விண்ணப்பிக்கும் பொழுது சுய விருப்புகளின் அடிப்படையில் பாடநெறியினை தெரிவு செய்தல் வேண்டும் விண்ணப்பம் சமர்ப்பித்ததன் பின்னர் **தெரிவு செய்த பாடநெறிகளை மற்றியமைப்பதற்காக எச்சந்தர்ப்பமும் வழங்கப்படமாட்டாது.**

1. விண்ணப்பத்தினை முழுமையாக பூரணப்படுத்தியதன் பின்னர் அதன் பிரதினை பதிவுறக்கம் செய்து தம்வசம் வைத்துக்கொள்ளவும்.
2. பூரணப்படுத்திய விண்ணப்பத்தின் பிரதியினை இம்முறை சுகாதார அமைச்சுக்கு அனுப்பிவைக்க வேண்டியதில்லை.

**இணையத்தில் பதிவேற்றும் போது கருத்தில் கொள்ள வேண்டிய முக்கிய விடயங்கள்.**

1. விண்ணப்பத்தினை ஆங்கிலத்தில் மட்டும் பூரணப்படுத்தல் வேண்டும்.

2. இணையத்தில் பதிவேற்றும் போது விண்ணப்பதாரர் க.பொ.த (உ/த) பரீட்சையில் பயன்படுத்திய தேசிய அடையாள அட்டையின் எண்னை பயன்படுத்துதல் வேண்டும்.

**இணையத்தில் விண்ணப்பங்களை பூரணப்படுத்தும் போது கருத்தில் கொள்ள வேண்டிய முக்கிய விடயங்கள்.**

1. உரிய பரீட்சை இலக்கத்தை உட்சேர்த்த பின்னர் க.பொ.த (உ.த), க.பொ.த (சா.த) பரீட்சை பெறுபேறுகள் கணினி மென்பொருள் ஊடாக தானாக உருவாகும். அந்த பெறுபேற்றில் ஏதாவது முரண்பாடுகள் இருப்பின் உரிய பாடம் மற்றும் பெறுறே என்பன அந்த இடத்தின் கீழே ஒதுக்கப்பட்டுள்ள கூன்டில் குறிப்பிடல் வேண்டும்.

2. விண்ணபத்தை பூர்த்தி செய்யும் போது உங்களுக்கு ஏதாவது சிக்கல்கள் எழுந்தால் அது தொடர்பாக வாரத்தின் வேலை நாட்களில் மு.ப 9.00 தொடக்கம் 4.00 வரையான காலத்தில் சுகாதார அமைச்சின் மனித வள முகாமைத்துவம் மற்றும் ஒருகிணைப்புப் பிரிவின் தொலைபேசி இலக்கம் 0112 340 007 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அது தொடர்பான அறிவுறுத்தல்களை பெற முடியும்.